# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 14 வெள்ளிக்கிழமை 29.11.2024 கதிர் 67



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# தமிழர்கள் மீது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சாடல்!

யாழ்ப்பாணம், நவ. 29

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு உள்ளாகி வரும் நிலையில் தொடர்ந்தும் எமது உரிமைகளை காக்கப் போராடிவரும் இனமாகவே தமிழினம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ள யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் எம். சோமபாலன், தமிழ் தேசிய விடுதலையை வென்றெடுப்பதற்கு முடிந்தவரை தொடர்ந்தும் பயணிப்போம் என்றும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது "அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த சீன தூதவர் தமிழ் மக்கள் தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து மாற்றத்துக்காக பயணிப்பதாகவும் இனப் பிரச்சனை தொடர்பில் ஒன்று இணைந்து பயணிப்பார்கள்" எனத் தெரிவித்த கருத்து தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ் 2 ➤

# முன்னாள் அமைச்சர் ராஜித விடுதலை!



கொழும்பு, நவ. 29

வெள்ளை வான் சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட இருபிரதிவாதிகளையும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது. நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷ்சங்க இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

2019 ஜனாதிபதித் தேர்தலின் போது வெள்ளை வான்களில் ஆட்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் ஊடாக அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்சவுக்கு அவமதிப்பு ஏற்படுத்தப்பட்டதாக குற்றம் சுமத்தி தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணையிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போது அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்சவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் பொய்யான சாட்சியங்களை உருவாக்குதல், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைப் பாதிக்கக்கூடிய வகையில் ஊழல் செயலைச் செய்தமை தொடர்பில் தண்டனைச் 2 ➤

# அடுத்த 24 மணி நேரத்துக்கு கடலுக்குச் செல்ல வேண்டாம்!

## – வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை –

கொழும்பு, நவ 29

புத்தளத்திலிருந்து காங்கேசன் துறை மற்றும் திருகோணமலை ஊடாக பொத்துவில் வரையான ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பரப்புகளுக்கு மறு அறிவித்தல் வரை செல்லவேண்டாம் எனவும் இலங்கையை சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளிலும் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் கடல் தொழிலாளர்களை வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையின் தாக்கம் காரணமாக இன்று நண்பகல் 12.00 மணி முதல் அடுத்த 24 மணி நேரத்துக்கான ஆலோசனையை வானிலை அவதான நிலையம் வெளியிட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளில் பலத்த மழை பெய்யக்கூடும். 2 ➤

கடற்பரப்புகளில் காற்று

# கைது!

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகநூல் பதிவொன்று தொடர்பிலான சந்தேகத்தின் அடிப்படையில் மேலதிக விசாரணைக்காகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் , கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர்

மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)



வடக்கின் வெள்ளப் பேரிடர்ப் பாதிப்பு தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனைச் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் இன்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போது, வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கான உடனடி உதவிகளை வழங்கல், காலநிலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதற்கான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# யாழ்ப்பாணத்தில் 69,384 பேருக்குப் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 29

இன்று நண்பகல் 12 மணி வரையான நிலவரப்படி யாழ்ப்பாணத்தில் சீரற்ற காலநிலை மற்றும் வெள்ள அனர்த்தத்தின் காரணமாக 20 ஆயிரத்து 732 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 384 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிக்கையிட்டுள்ளது.

04 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், 178 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும், தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டுள்ள 2 ➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# காணாமற்போனோர் தொடர்பான அலுவலக உறுப்பினர் பதவிக்கு விண்ணப்பம் கோரல் !

கொழும்பு, நவ. 29

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ் காணாமற்போன நபர்கள் தொடர்பான அலுவலகத்தின் ஸ்தாபனம், நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளை நிறைவேற்றுதல் விதிகளின்படி அரசியலமைப்பு சபையினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தின் உத்தியோக பூர்வ இணையத் தளமான www.parliament.lk இல் இது தொடர்பான விண்ணப்ப படிவத்தையும், வவரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை - அரசியலமைப்பு சபையின் செயலாளர் நாயகம், அரசியலமைப்பு சபை - அலுவலகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே என்ற முகவரிக்கு டிசம்பர் 2024 09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் பதிவு தபால் மூலமாகவோ அல்லது constitutionalcouncil@parliament.lk என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ




# 'ஆளுநருக்குச் சொல்லுங்கள்' மேல் மாகாணத்தில் திட்டம் !

கொழும்பு, நவ. 29

மேல் மாகாணத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநரிடம் நேரடியாக முறைப்பாடுகளை முன்வைக்கும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

எதிர்வரும் 02 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள இந்த விசேட தொடர்பாடல் திட்டத்தின் கீழ், மேல் மாகாணத்தினுள் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள், அரசாங்க அலுவலகங்களின் சேவைக் குறைபாடுகள் மற்றும் ஆலோசனைகளை மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரும் வகையில் 'ஆளுநருக்குச் சொல்லுங்கள்' தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும்.

நாளொன்றின் 24 மணித்தியாலங்களும், வாரத்தின் ஏழு நாட்களும் பொது மக்கள் 011-2092720, 011-2092721 ஆகிய தொலைபேசிகள் மூலமாக அல்லது 011-2092705 என்ற தொலைநகல் ஊடாகவோ அல்லது லிஸ்ரீஸஷிமிஷ்லிஜஷிலிதுழஸ்ரீ÷ ஆதுழிஷ்யி.உலிது என்ற மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம் என மேல் மாகாண ஆளுநர் பணிமனை அறிவித்துள்ளது. (ஐ-09)



கிழக்கு மாகாணத்தில் சீரற்ற காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சமைத்த உணவுப் பொதிகளை வழங்கியது. இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று உணவுப் பொதிகளை வழங்கினார். வெள்ளம் கடுமையாகப் பாதித்த சில பகுதிகளுக்கு இயந்திரப் படகில் சென்று உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (படங்கள் வி.ரி.சபாதேவராஜா)

## தமிழர்கள் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் எந்த ஒரு நாட்டினையும் நட்பு நாடாகவோ அல்லது எதிரி நாடாகவோ பார்ப்பது கிடையாது. இவ்வாறான நிலையில் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சீன தூதுவர் தெரிவித்த கருத்து தொடர்பில் சில விளக்கத்தை தெரிவிக்கலாம் என நினைக்கிறேன்.

தமிழ் மக்கள் வாழ்வியல் நீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தொடர்ந்து இன அழிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இறுதி யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்கள் விவகாரம், சிறையில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நோக்கி பயணித்த நிலையில் அதற்கான தீர்வு கிடைக்கப் பெற வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். அண்மையில இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை வைத்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடியாது. ஏனெனில் அதையும் தாண்டி பயணிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் ஒருவர் காணாமல் போனவர்களை 15 வருடங்களாக காணவில்லை என்றால் காணவில்லை தான் என்ற கருத்துப்பட கருத்து தெரிவித்திருந்தார். அவருடைய கருத்தை பார்த்தால் 2009 க்கு முன்னர் அவர்களுடைய கட்சி பலரை காணாமல் ஆக்கியது. அது தொடர்பில் கருத்து தெரிவிக்க வேண்டும் என்பதற்காக இதை அவர் அவ்வாறு காணாமல் போனது காணாமல் போனது தான் என்ற கருத்து படத் தெரிவித்திருக்கிறார்.

ஆகவே, தமிழ் மக்கள் தமது தேசிய விடுதலைக்காக போராடி வரும் ஒரு இனமாக காணப்படுகின்ற நிலையில் அதனை வென்றெடுப்பதற்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற வகையில் எங்களால் முடிந்தவரை தொடர்ந்தும் பயணிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## முன்னாள் அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தின் கீழ் பிரதிவாதிகளான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (இ

## அடுத்த 24 மணி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*வடமேற்கு திசையிலிருந்து மேற்கு நோக்கி வீசக்கூடும். நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வரை காணப்படும். புத்தளத்திலிருந்து காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.*

*கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகவும், மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படலாம். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்புடன் காணப்படும். மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளுக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் இரண்டரை முதல் மூன்றடி உயரத்துக்கு அலைகள் மேலெளலாம். (ஐ-06)*

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*2 ஆயிரத்து 136 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 342 பேர் மாவட்டமெங்கும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ள 79 இடைத்தங்கல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-77)*






முன்னாள் அமைச்சர்கள் பாவித்த

# அதிசொகுசு வாகனங்களை ஏலத்தில் விடத் தீர்மானம்!

கொழும்பு, நவ. 29

அமைச்சுக்களுக்குச் சொந்தமான சுமார் 254 அதி சொகுசு வாகனங்களை ஏலத்தில் விடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அரசாங்கமதிப்பீட்டாளரின் சான்றிதழைப் பெற்று, அமைச்சரவை அங்கீகாரத்துடன் சொகுசு வாகனங்கள் ஏலம் விடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த சொகுசு வாகனங்களில் பெரும்பாலானவை முன்னாள் அமைச்சர்களின் பாவனையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவற்றைப் பராமரிப்பதற்கு அரசாங்கம் பாரிய செலவைச் சுமக்க வேண்டியுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வரியில்லா வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதையும் அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளதுடன், 5 வருடங்களின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்து செய்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவை தொடர்பில் ஆராய்வதற்காகன் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டுள்ளார். (ஐ-79)

# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு கனேடிய தமிழர் பேரவை நிவாரண உதவி!

முல்லைத்தீவு, நவ. 29

அண்மைக்கால அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளில் கனேடிய தமிழர் பேரவையும், வடக்கு - கிழக்கு பொருளாதார அபிவிருத்தி மையமும் கைகோர்த்துச் செயற்படவுள்ளன.

அதனொரு அங்கமாக இலங்கையில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான வெள்ளநிவாரணப்பணிகள்இன்றுவியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பமானது. வடக்கு மாகாண ஆளுநர், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் ஆகியோருடன் கள நிலவரத்தை மதிப்பிடுவதற்கு ஆலோசனை நடத்தப்பட்டது. நிவாரணப் பொருட்களின் விநியோகம் பாதிக்கப்பட்ட மக்களின் முன்னுரிமைகளுடன் சீரமைக்கப்படுவதையும், ஒரே பொருட்கள் மீண்டும் மீண்டும் தேவைக்கு மேலதிகமாக கொடுக்கப்படுவதை தவிர்க்கவும் உறுதி செய்யப்பட்டது.



முல்லைத்தீவுமாவட்டத்தின்புதுக்குடியிருப்புப் பிரிவில் அமைந்துள்ள மண்ணாகண்டல் இடைத்தங்கல் நிலையம், நிவாரணப் பணிகளுக்கான முக்கிய இடமாக அடையாளம் காணப்பட்டது. இந்த இடைத்தங்கல் நிலையத்தில் 147 குடும்பங்களைச் சேர்ந்த 479 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதிகாரிகளின் வழிகாட்டுதலின் அடிப்படையில், இங்குள்ள மக்களுக்கு பால்மா, சவர்க்காரம் உட்பட்ட அத்தியாவசியப் பாவனைப் பொருள்கள் இன்று வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களிலும் மேலதிக இடைத்தங்கல் நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவர்களின் தேவைகள் கவனமாக மதிப்பீடு செய்யப்பட்டு, அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப நிவாரணப் பொருட்கள் நாளை வழங்கப்படும் என்று நிவாரணப் பணியாளர்கள் தெரிவித்தனர். (இ)






திருகோணமலை, கிண்ணியா, மூதூர், தோப்பூர், சேருவில மற்றும் தம்பலகாமம் பகுதிகளில் சீரற்ற காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் நீரில் மூழ்கியுள்ள இடங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசியர். ஜயந்த லால் ரத்னசேகர கண்காணிப்பு விஜயமொன்றினை மேற்கொண்டார். இந்த விஜயத்தின் போது வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன ஆகியோரும் உடனிருந்தனர். (படங்கள் : ஹஸ்பர் ஏ.எச்)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

# சிறுவர்களும் கார்ட்டூன்களும்




கு.லோகிதா
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழககம்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் போன்ற இன்னோர் என்ன சிறுவர்களை முன்னிறுத்திய மகுட வாசகங்கள் எல்லாம் மீண்டும் வாசகங்களாக மட்டுமின்றி செயல்வாதங்களாக முன்னெடுப்பதற்கான காலம் வாய்ப்பாகி உள்ளதாகவே சிந்திக்க வேண்டியிருக்கிறது இவ்வுலகமானது சிறுவர்களால் இணைந்து பிணைக்கப்பட்டுள்ளதால் அவர்களை பாதுகாக்க வேண்டியது ஒரு கடமையாக காணப்படுகிறது

பல்வேறு தொழில்நுட்பங்களிலும் இணையங்களாலும் மூழ்கி போன உலகமானது பல்வேறு மனிதர்களையும் ஆட்கொண்டு வருவதுடன் அது சிறுவர்களையும்விட்டு வைத்து விடவில்லை. தாத்தா பாட்டியின் அரவணைப்பில் இருந்து அவர்களது கதைகளையும் பாடல்களையும் தாயின்' நிலா நிலா ஓடி வா...' எனப் பாடல்களை எல்லாம் மறந்து தற்போது ஊடகங்களின் மடியில் உறைகின்ற காலமாக போய்விட்டது.

கடந்த காலங்களில் சில நடத்தை மாற்றுங்கள் காரணமாகவும் தாய் தந்தை பெற்றோர்கள் வேலைகளுக்கு செல்வதாலும் பிள்ளைகள் நேரத்தினை கழிப்பதற்கே முடியாத காரணங்களினால் அவர்களை சமாளிப்பதற்காக தொலைக்காட்சி தொலைபேசிகளில் காட்டூன்களை கொடுத்து பழக்குகிறார்கள் இந்த ஆரம்பமானது அவர்களுக்கு அதற்கு உள்நுழைந்து தங்களை முழுமையாக ஆட்படுத்தி வருகின்ற நிலைக்கு உட்படுத்துகிறது.

உலகில் கிட்டத்தட்ட 80% சிறுவர்கள் தங்களைக் காட்டுங்கள் உட்படுத்தி வருவதுடன் இது 1800க்கு மேல் பிற்பட்ட காலங்களில் இருந்து காட்டுங்கள் வளர்ச்சி அடைந்து வருவதுடன் இதனை அனிமேஷன்களை பயன்படுத்தி குழந்தைகளை கவரும் விதத்தில் நகைச்சுவை, விலங்குகள், ஸ்பைடர்மேன் போன்ற பல்வேறு வடிவங்களை சிறுவர்களின் மனதில் உடனடியாக இடம் பிடிக்கக் கூடிய வகையில் வடிவமைத்து வருகின்றனர் அத்துடன் சிறுவர்களின் மையமாகக் கொண்டு தீலிற்மிற்னுள , ஹிளமிக்ஷீயிஷ்மு, ம்ஷ்விஜளதீ+, ஞ்ரீஷஷ்துள ஸஎ-ஷ்லி போன்ற இணையதளங்கள் சிறுவர்களுக்காக கார்ட்டூன்களை தயாரித்து வெளியிட்டு வருவதுடன் அவற்றில் ம்ஷ்விஜளதீ+ எங்க தளமானது 2024 ஆம் ஆண்டு அமெரிக்காவினுடைய அறிக்கையின்படி ஏப்ரல் மாதம் வரை 7.6% சிறுவர்கள் அதிகமாக பார்வையிட்ட தளமாகவும் காணப்படுகின்றது அதனை அடுத்ததாகவே தீலிற்மிற்னுள சேனல் காணப்படுவதுடன் அது 19.33% வித்தினை கொண்டு காணப்படுகிறது மற்றும் சிறுவர்கள் ஒரு நாளில் 1-2 மணித்தியாலங்களில் 40% மானவர்கள் பார்வையிட்டதுடன் தினந்தோறும் 65.2% சிறுவர்கள் தங்கள் பொழுதினை காட்ரூன்களை பார்த்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு சிறுவர்கள் காட்டுங்களுடன் இணைந்து வருவதனால் அவர்களுக்கு பல்வேறு விதமான பிரதிகூலங்களை ஏற்படுத்தி வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. அவற்றில் கண்பார்வையானது குறைவடைந்து போவதற்கான வாய்ப்புகள் காணப்படுகிறது ஏனெனில் இவர்கள் தங்களுடைய நாள் பொழுதினை அதிகமாக தொலைபேசியுடனும் தொலைக்காட்சிகளினுடனும் கழுத்து வருவதனால் அவர்களுடைய பார்வை ஆனது குறைவடைந்து செல்வதற்கான வாய்ப்புகளை கொண்டு காணப்படும். மட்டும் மூளை வளர்ச்சி குறைவடைய செய்வதற்கு இந்த காட்டுங்கள் ஒரு காரணமாக காணப்படுகின்றன. ஏனெனில் காட்டுஉங்களை பார்த்திருந்த போது ஒரே மனநிலைடன் அதை பார்ப்பதனாலும் விரட்டி கொண்டு அதை பார்க்கின்ற போது அந்த செயல் அவர்களின் மூளை வளர்ச்சி நீ பாதிக்கின்ற ஒரு செயலாகவும் காணப்படுகிறது மற்றும் வேறு விதமான சிந்தனைகளை அவர்கள் குறைவடைத்து கொள்வதுடன் முழு நேரத்தையும் கார்ட்டூன் வெட்டிய சிந்தனைகளிலேயே காணப்படுவதனால் அவர்களுடைய சிந்தனை போக்கானது மாற்றமடைந்த செல்கின்ற தன்மையும் காணப்படலாம். மட்டும் வன்முறை சித்திரங்கள் ஏற்படலாம் ஏனெனில் கார்ட்டூன்களில் வெவ்வேறு விதமான முறைகள் வெளியிடப்படுவதனால் உதாரணமாக ஸ்பைடர்மேன் என்ற கார்ட்டூன் பார்க்கின்ற போது தாங்களும் அவரை நீ போல் இருக்க வேண்டும் என நினைத்து தவறான முடிவுகள் என்னை அடுத்து உயிரினை இழந்த சம்பவங்களும் காணப்படுகின்றது இதனால் அவர்களுடைய வன்முறைகள் மனதில் வெவ்வேறு விதமான தோன்றுவதற்கும் இவை காரணமாக அமையலாம். மற்றும் மோசமான வார்த்தை பிரயோகங்கள் அவர்களில் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படும் ஏனெனில் சில காட்டுகளில் அருவருப்பான வார்த்தைகளை பயன்படுத்துவதனால் அவைத்தினை பார்க்கின்ற சிறுவர்களுக்கு அவ்வாறான வார்த்தைகளை அவர்களும் உச்சரிக்க தொடங்குகின்ற நிலைக்கு தள்ளப்படுகின்றன. அடுத்ததாக கார்ட்டூன்கள் ஊடான நாள் பொழுது அதாவது பெற்றோர்கள் தங்களின் வேலைகளுக்காகவும் குழந்தைகளுடன் நேரத்தினை செலவழிப்பதற்கு நேரம் போதாமையாலும் சிறுவர்களுக்கு இதனை பழக்குவதற்கு அவர்களே ஒரு காரணமாகவும் காணப்படுகின்றன மற்றும் இதனை பார்த்து பழக்கப்பட்ட இவர்கள் தங்களுடைய வாசிப்பு பழக்கத்தையும் புத்தகப் பலகத்தையும் விடுத்து தங்களுடைய நாட்களை உணவு உண்கின்ற போதும் நித்திரை செய்கின்ற போதும் போன்ற அனைத்து செயல்பாடுகளிலும் இந்த கார்ட்டூன் தங்களோடு இணைந்த ஒரு மாற்றுத் தாயாகவே பயன்படுத்தி வருகின்றன.

இவ்வாறு சிறுவர்களில் மத்தியில் ஏற்படுத்திய கார்ட்டூன் பழக்கமானது முற்றுமுழுதாக தீமை தான் சொல்லிவிடுகிறது என்றால் இல்லை எனத்தான் கூறலாம் ஏனென்றால் இதன் மூலம் சில சிறுவர்களுக்கு நன்மையான விடயங்களும் ஏற்படுகின்றன அதாவது அவர்களுக்கு இதனை தொடர்ச்சியாக பார்த்து வருவதினால் புதிய மொழி பயன்பாடுகள் வார்த்தை பிரயோகங்கள் அவர்களின் மத்தியில் உருவாவதற்கான வாய்ப்பு குறிப்பாக ஆங்கில வார்த்தைகள் சிறுவயதிலேயே உச்சரிக்க ஒலிக்கின்ற திறமை உண்டாகிறது. மற்றும் மூளை விரித்தியினை அதிகரிக்கவும் செய்கிறது. ஏனெனில் தற்கால சிறுவர்கள் தொழில்நுட்பங்களுடன் வாழ்ந்து வருவது நான் அவர்களுடைய சிந்தனைகள் வித்தியாசமானதாகவும் பறந்துபட்டதாகவும் காணப்படுவது இதற்கு ஒரு காரணமாகவும் இவை இருந்து வருகின்றன.

இவ்வாறு சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்ற இந்த கார்ட்டூன் பழக்கமானது அவர்களுக்கு நன்மையாக அமைகின்ற வகையிலும் அதிகமான பிரதிகூலங்களை அதாவது சில உயிரிழப்புகளையும் ஏற்படுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது. இதனால் இந்த பழக்கத்திலிருந்து சிறுவர்களை விடுவித்துக் கொள்வதற்கும் அதனை ஆரம்பித்து வைத்த பெற்றோர்களே அவர்களை வெளியுலகத்திற்கு ஊடகங்களில் இருந்து வெளிக்கொண்டு வருவதற்கும் வழி கோலியாக அமைய வேண்டியது ஒரு கடமையாக உள்ளது இதனால் சிறுவர்களின் நன்மையினை கருத்தில் கொண்டு எவ்வளவு இதனை குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து என் இயற்கையுடன் இணைந்து உறவுகளுடன் இணைந்து நல்ல ஒரு புதிராக கொண்டுவர முயற்சி செய்வோம்.



# அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரிலேயே சீன அரசாங்கம் இலங்கைக்கு உதவுகிறது!

**- சீனத் தூதுவர் கீ சென்ஹொங் விளக்கம் -**

கொழும்பு, நவ. 29

சீனநிதியுதவியின்கீழ்இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட பாரிய திட்டங்களைவெள்ளையானைகள் எனசிலர்குற்றம்சுமத்தியபோதிலும், அந்த திட்டங்கள் அனைத்தும் முன்னாள் அரசாங்கங்களின் கோரிக்கைக்கு அமைவாகவே நிர்மாணிக்கப்பட்டவையாகும்என இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்தார்.

ஊடக நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே சீனத் தூதுவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென்ஹொங்நேற்றுவியாழக்கிழமை பிற்பகல் ஊடகப் பிரதிநிதிகள் குழுவுடன் இணைந்து சீன நிதியுதவியின் கீழ் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து கலந்துரையாடினார். இதன்போது, இலங்கை தரப்பு மோசமான முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டதால் சில திட்டங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என தூதுவர் குற்றஞ்சாட்டினார்.

உதாரணமாக, தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள தாமரை கோபுரத் திட்டம் தற்போது இலாபம் ஈட்ட ஆரம்பித்துள்ளதுடன், அது இலங்கையின் அடையாளமாக மாறியுள்ளதாகவும் சீனத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனா முதலீடு செய்துள்ள அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கொழும்பு துறைமுகம் இலங்கை அரசாங்கத்திற்கு பெருமளவு வருமானத்தை கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக கொழும்பு துறைமுக நகரத் திட்டம்முழுக்கமுழுக்கசீனாவின் முதலீடு என்று சுட்டிக்காட்டிய தூதுவர், இலங்கையினால் எந்தப் பணமும் செலவிடப்படவில்லை என்றும் தெரிவித்தார்.



சிலர் சீனக் கடன்கள் மற்றும் முதலீடுகளை, கடன் பொறி என்று கூறினாலும், அந்த முதலீடுகள் இலங்கையுடனான வலுவான நட்புறவின் அடிப்படையில் செய்யப்பட்டவை என்றும் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அல்ல என்றும் அவர் வலியுறுத்தினார்.

வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியாமல் சுதந்திர நாடாக எழுந்து நிற்க இலங்கைக்கு சீனா நிதியுதவி வழங்கியதாகவும், புதிய அரசாங்கத்தின் கீழ் சீன-இலங்கை உறவுகள் புதிய அத்தியாயத்தில் பிரவேசிக்கும் எனவும் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டார்.

சீனா - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் 7 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதிலும் இதுவரையில் ஏன் கைச்சாத்திடப்படவில்லை என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதற்குப் பதிலளித்த அவர், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஊடாக இலங்கை சந்தையை சீனா ஆக்கிரமிக்கும் என்ற தவறான அச்சம் நிலவுவதாகத் தெரிவித்தார். .

சுதந்திர ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டால், ஒரு வருடத்தின் பின்னர் பாதகமான விடயங்கள் இருப்பின் அதனைத் திருத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் சீனத் தூதுவர் சி ஜான்ஹொங் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் , கொவிட் தொற்றுநோய் மற்றும் இலங்கை எதிர்கொண்ட பாரிய பொருளாதார நெருக்கடி மற்றும் அனர்த்த நிலைமைகளின் போது எவ்வாறு இலங்கைக்கு ஆதரவளித்ததோ அதேபோன்று எதிர்காலத்திலும் சீனா இலங்கைக்கு உண்மையான நண்பனாக ஆதரிக்கும் என தூதுவர் சுட்டிக்காட்டினார். (ஐ-07)







## அமைச்சர் விஜித ஹேரத் நீதிமன்றத்தில் ஆஜர்!

கொழும்பு, நவ. 29

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் சாட்சியமளிப்பதற்காக அமைச்சர் விஜித ஹேரத் இன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது அபிவிருத்தி லொத்தர் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைமனு கோரல் முறைக்கு மாறாக பல தனியார் நிறுவனங்களுக்கு லொத்தர் ஊக்குவிப்பு பணிகளை ஒப்படைத்து அரசாங்கத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தி அதன் முன்னாள் தலைவர் சந்திரவன்ச பதிராஜவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கு தொடர்பில் முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்திருந்த அமைச்சர் விஜித ஹேரத்தை இன்றைய தினம் சாட்சியமளிக்க நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் அமைச்சர் விஜித ஹேரத் இன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

வழக்கு விசாரணையின் போது முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களைப் பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.எஸ்.சபுவித சாட்சிய விசாரணையை எதிர்வரும் பெப்ரவரி 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அன்றைய தினம் அமைச்சர் விஜித ஹேரத்தை மீளவும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ-09)

# வெள்ளப்பெருக்கு மற்றும் அனர்த்தம் காரணமாக 4 இலட்சத்து 41 ஆயிரத்து 590 பேருக்குப் பாதிப்பு!

கொழும்பு, நவ. 29

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 24 மாவட்டங்களைச் சேர்ந்த 1 இலட்சத்து 32 ஆயிரத்து 110 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 41 ஆயிரத்து 590 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இன்று வெள்ளிக்கிழமை காலை 06.00 மணிக்கு வெளியிட்ட நிலவர அறிக்கையின் படி, நாடு முழுவதும் பதிவுசெய்யப்பட்ட பல்வேறு அனர்த்தச் சம்பவங்களினால் 14 பேர் உயிரிழந்துள்ளதாகவும், ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும், 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெள்ள அனர்த்தம் காரணமாகத் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ள 12 ஆயிரத்து 348 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 616 பேர் 437 இடைத்தங்கல் முகாம்களிலும், 1 இலட்சத்து 15 ஆயிரத்து 319 பேர் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம், வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு அபாயம் முற்றாக நீங்காததனால் நாட்டின் பல பாகங்களுக்கும் பலவிதமான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

### வெள்ள அபாய எச்சரிக்கை

தெதுரு ஓயாவின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதனால் வாரியபொல, நிக்கவெரட்டிய, மாஹோ, கொபேகனே, பிங்கிரிய, பல்லம, சிலாபம், ஆராச்சிக்கட்டுவ மற்றும் ரஸ்நாயக்கபுர பிரதேசங்களில் உள்ள மக்கள் வெள்ளம் குறித்து அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கலா ஓயா, மல்வத்து ஓயா, களனி ஆறு, ஹெடா ஓயா, மஹாவலி ஆறு மற்றும் முந்தேனி ஆறு ஆகியவற்றின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதால் பல பகுதிகளுக்கு அம்பர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### நிலச்சரிவு எச்சரிக்கை

இன்று மாலை வரை அமலுக்கு வரும் வகையில் 09 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ளது. அதன்படி கண்டி, கேகாலை, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் சில பகுதிகளில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு அம்பர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கொழும்பு, கம்பஹா, கேகாலை, குருநாகல், நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### மீட்பு நடவடிக்கைகளில் முப்படை

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்தத்திலிருந்து நாட்டு மக்களை மீட்கும் நிவாரண நடவடிக்கைகளில் மூவாயிரத்து 183 முப்படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இரண்டாயிரத்து 80 இராணுவ அதிகாரிகள், 520 கடற்படையினர் , 540 விமானப்படையினர் மற்றும் 43 காவல்துறை அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் பேரிடர் அவசரநிலைகளின் போது உதவி தேவைப்படுவோர் பின்வரும் 117, 0112 136 222 / 0112 670 002 ஆகிய அவசர தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

மேலும், 011-2027148, 011-2472757, 011-2430912, 011-2013051, 011-2013051 அல்லது 107 ஆகிய 24 மணி நேரமும் செயல்படும் பொலீஸ் அவசர அழைப்புத் தொலைபேசி இலக்கங்களுடன் மக்கள் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-09)

# ஆற்றில் எருமை மேய்த்தவரை இழுத்துச் சென்றது முதலை!



அம்பாறை, நவ. 29

பொத்துவில், முதலைப் பாறை பகுதியில் உள்ள தூவ ஆற்றில் எருமைகளை அழைத்துச் சென்ற நபர் ஒருவரை முதலை இழுத்து சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

முதலையின் பிடியில் சிக்கிக் காணாமல் போன 41 வயதான நபரைத் தேடும் பணியில் பானம கடற்படையினரும், பொத்துவில் பொலீஸாரும் இணைந்து ஈடுபட்டுள்ளனர். (ஐ-12)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.11.2024 இல் வெளியிடப்பெற்றது.